630

பதிவு எண் — M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—4 குருகுலம், மாம்பாக்கம்; கர, மாசி; 15—2—52. தளிர்—20

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## தானமும் தவமும்

மக்கள் வாழ்க்கை நன்கு நடைபெறுவதற்குப் பொருள் நிலை முதன்மையாகக் கருதப்படுகிறது. பொருளைத் தொகுப்பதற்கு நாட்டில் பலவகையான வழிகள் கையாளப்படுகின்றன என்ருலும் பாவம் கலவாத நல்லாற்றினால் தொகுக்கப்படும் பொருளே சிறந்தது. மற்றவை தீநெறியிற் செலுத்தும் பண்புடையவாகும். நல்லாற்றினாற் பெற்ற பொருளை முழுதும் தாமே துய்க்காமல், ஒரு பகுதியைப் பிறர் உதவியின்றித் தாமே வாழ இயலாதவர்க்கும் தம்மினும் தாழ்ந்த ஏழை எளியவர்க்கும் சுற்றத்தவருக்கும் நாட்டுக்குப் பெரும்பயன் விளைக்கும் நல்லறிஞர்க்கும் பகுத்துக் கொடுத்து எஞ்சியதைக் கொண்டு தாமும் துய்த்து இன்புறுதலே சிறந்ததாகும். இத்தகைய செயலே 'தானம்' என்று வழங்கப் பெறும்.

தானம் புரியும் பண்புடைமை, அருளொழுக்கத்தினின்றும் பிறக்கிறது. பிறர் செய்யும் தீங்கை அன்பால் பொறுத்துச் சிறிதும் முனிவு காட்டாது, அவர்க்கு நலம் புரிய விரைதலும், ஓரறிவினையுடைய உயிர்கட்கும் துன்பம் போக்க விழைதலும் ஆகிய குளிர்ந்த உளப் போக்கே அருளொழுக்கத்தின் இலக்கணங்களாகும் இத்தகைய ஒழுக்க நெறியிற் செல்வதே தவம் எனப்படும்.

தானமும் தவமும் வேறு பிரிக்க முடியாதனவாம். சிறந்தோர் வாழ்க்கையில் இவை இணைந்து ஏனைய செயல்களைவிட முதன்மையாகக் காணப்படும். இவை உண்டாவதற்கு அடிப்படையாக மகிழ்ச்சி வேண்டும். மகிழ்ச்சி வாழ்க்கை வளத்தினால் உண்டாகிறது. வளம் உண்டாவதற்கு வானம் சுரக்கவேண்டும். மழையின் செழிப்பே மக்கள் உள்ளச் செழிப்புக்குக் காரணமாகித் தானமும் தவமும் உலகில் நிலைபெறுமாகலின் மழையின்றேல் அவை 'தங்கா' என்று இத் திருக்குறள் நுவல்கிறது.

---

தானம் தவம் இரண்டும்
தங்கா வியன் உலகம்
வானம் வழங்கா(து) எனின்.

வியன் உலகம் தானம் தவம் இரண்டும் தங்கா—அகன்ற உலகின்கண் தானமும் தவமும் ஆகிய இரண்டறமும் உளவாகா.
வானம் வழங்காது எனின்—மழை பெய்யாதாயின்.

வழங்கல், கைம்மாறு கருதாது தானே கொடுத்தல். 'நல்கல்' என்புழிப் போல இது மழையின் அருளுடைமையைக் காட்டுகின்றது.

தானமாவது, அறநெறியான் வந்த பொருள்களைத் தக்கார்க்கு உவகையோடும் கொடுத்தல்; தவமாவது அருளொழுக்கம்.

இவ்விரண்டும், இல் வாழ்வில் நல்லொழுக்க நெறியில் நிற்கும் ஒவ்வொருவர்க்கும் மிக முதன்மையாகப் பொருந்துவவாகும். தவம் இன்றித் தானமில்லை. தானமும், தவம் இலரர் இல்வழியில்லை.

தானத்துக்கும் தவத்துக்கும் நல்லுடல் முதன்மையாகத் தேவை. நல்லுடலுக்குப் பொருந்திய உணவு முதலியன தேவை. உணவு முதலியவற்றிற்கு வளம் தேவை. வளத்துக்கு மழை இன்றியமையாதது. ஆகவே, மழை இன்றேல் தானமும் தவமும் இல்லை என்பது விளங்குகிறது.

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

4-ம் ஆண்டுக் கையொப்பம்
(5-10-51 முதல்)

| | | | | |
|---|---|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி :—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

| கிளை | கர, மாசி, | தளிர் |
|---|---|---|
| 4 | 15-2-52 வெள்ளி | 20 |

# தமிழர் முயற்சிகள்

மொழி கலை தொழில் அருள் பணி எனும் ஐவகை நிலையிலும அவ்வந் நாட்டு மக்களும் உயர்ந்து நின்று உரிமைக்கு ஊறு நேரா வகையில் தமக்குள் ஒப்புரவோடு வாழ்வதற்கான முயற்சிகளில் மக்களை ஊக்குவதும் பழக்குவதுமே குருகுலத்தின் அடிப்படையான நோக்கம்.

இந் நோக்கத்தை ஒட்டித் தமிழர்களின் முயற்சிகள் இவ் ஐவகை நிலைகளில் முதலாவதான மொழி அளவில் இன்று எப்படி உள்ளது என்று சற்றுக் கருதலாம்.

மொழி வகையில், தமிழ், இன்று உலகில் வழங்கும் மொழிகள் எல்லாவற்றிற்கும் மிகப் பழைய மொழியாய், நிலையான இலக்கண இலக்கியங்களை உடைய உயர் தனிச் செம்மொழியாய், உலகியல் அருளியல் வாழ்க்கைகளுக்கு ஏற்ற கொழுந்தோடிய நாகரிக நன்முடிபுகளை உடைய இணையற்ற பெருநூல்கள் பலவற்றைக் கொண்டதாய் இருக்கின்றது.

வடமொழி ஒன்றைத் தவிர தமிழோடு போட்டியிடத் தக்க ஒரு மொழி இன்று உலகில் இல்லை. அவ் வடமொழிதானும் நீண்ட நாட்கு முன்பே பேச்சு வழக்கில் இறந்துபட்ட மொழியாய், அன்றும் தமிழ் நன்மக்களாலேயே வளப்படுத்தப்பட்ட மொழியாய், செயற்கை ஒலிகள் மிக்கதாய், எழுத்தற்றதாய் இருத்தலின், தமிழுக்குப் பிற்பட்டதும் தமிழ் மூலங்களிலிருந்தே பெரும் பகுதி தோன்றியதும் ஆகும் என்னும உண்மைகள் நாளும் மொழி நூல் வல்லவர்களால் உறுதிப் படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்ச் சொற்களில் பல வடமொழிச் சிதைவுகளென்றும், அரிய தமிழ் நூல்களிற் பல பிற்காலத் தெழுந்த வடமொழி நூல்களின் மொழி பெயர்ப்புகளென்றும் சொல்லப் பெற்று வந்த நிலை மாறி, இன்று, வடமொழிச் சொற்கள் பலவற்றிற்கும் நல்ல நூல்கள் பலவற்றிற்கும் தமிழ்ச் சொற்களும் தமிழ் நூல்களும் தமிழ் முன்னோர்களுமே காரணம் என்னும உண்மைகளும் வெளிப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

இந்நிலையில், தமிழர்களின் தமிழன்பும், பிறவும் வெறும் பிறமொழிக் காழ்ப்பாகப் பெருகிக்கொண்டிருக்கின்றதே ஒழியத் தமிழ்க் காப்பாகப் பெருகவில்லை.

உரிமை கிடைத்து விட்டது. விழிப்படைந்து விட்டோம் என்று நாட்டுத் தொண்டர்களும் அல்லாதவர்களும் பெருமைப்பட்டுக் கொள்ளும் இந் நாட்களிலும், தமிழ், தமிழ் மக்களின் ஆட்சியிலோ சடங்குகளிலோ வழிபாடுகளிலோ வாணிகத்திலோ முதன்மை பெறவேயில்லை. தமிழர் தம் வழிபாடு சடங்கு முதலியவைகளைத் தமிழால் செய்துகொள்ள வேண்டும் என்றால், அது வடமொழிக் காழ்ப்பு என்று கொள்ளப்படுகிறது. உண்மையில் வடமொழிப் பயிற்சி தமிழர்க்கு மிகவும் நன்மை செய்யக் கூடியது என்பதையும் ஆனால் எத்துறையிலும் தாய்மொழிக்கே முதன்மை தந்து, மொழிகளைக் கலந்து குழப்பாமல் தனித் தனியே செப்பமாகக் கையாள வேண்டும் என்பதையும் மனமார ஒப்புக் கொள்வார் பலர் இன்று இருப்பதாகத் தெரியவில்லை.

தமிழ்மொழித் தொடர்பான செயல்களைச் செய்யும்போது அதற்குரிய பெரியோர் யார் எனத் தேடித் தழுவிக்கொண்டு செய்யாமல், தமக்குத் தெரிந்தோர், அரசியல் துறையில் இதழ் உலகில் தொண்டு நிலைகளில் உயர்ந்து பலர்க்குத் தெரிந்தோர் என்பதற்காக யார் யாரை எல்லாமோ தழுவிக் கொண்டு செயல்கள் செய்யப்படுகின்றன. உண்மைகட்கு முதன்மை கொடுக்காமல் விளம்பரங்களுக்கே முதன்மை கொடுக்கப்படுகின்றன.

இடைக் காலத்தில் தமிழின் சிறப்புக்களை எடுத்துக் காட்டி இன்றைய விழிப்புக்கும் மறுமலர்ச்சிகளுக்கு எல்லாம் அடிகோலிய உண்மையான தமிழ்த் தலைவர்களைப்பற்றி மக்களிற் பலர் அறியாமலும் அறிய முடியாத படியும் நிலைமைகளும்

செயல்களும் இருக்கின்றன. பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, பேரறிஞர் பா. வே. மாணிக்க நாயகர், சிவத்திரு. மறைமலை அடிகள், பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார், உயர்திரு. கா. சுப்பிரமணியம் பிள்ளை, முதுபெரும்புலவர். உ. வே. சாமிநாதையர், பண்டிதமணி கதிரேசன் செட்டியார், நாவலர் சோமசுந்தர பாரதியார், அருட்டிரு விபுலாநந்த அடிகள், திரு. வி. க. தேவநேயப் பாவாணர், ஆசிரியர் இளவழகனார் போன்ற ஒப்பற்ற தமிழ்ப் பெருந் தலைவர்களில் எத்தனைப் பேரைப் பற்றி மக்கள் நன்கறிவர்; தமிழ் நாட்டில் நடைபெறும் எத்துணைத் தமிழ் இதழ்கள் இவர்களைப் பற்றியும் இவர்களாற்றிய தொண்டுகளைப் பற்றியும் மக்களுக்கு விளம்பரம் தந்திருக்கின்றன?............

மேலை நாட்டுப் புதிய நாகரிகமும் அதற்கேற்ற பண்டங்களும் பெருகிவரும் இந் நாட்களில், அவற்றிற் குரிய பெயர்களை அப்படியே தமிழில் வழங்குவதல்லது தமிழ் மொழியில் உள்ள அருமையான கருத்துக்களைக் கொண்டு நல்ல தமிழ்ச் சொற்களில் அவற்றை மொழி பெயர்த்து வழங்குவதில் எத்துணைத் தமிழர் விழிப்பாகவும் கிளர்ச்சியாகவும் இருக்கின்றனர்? மொழிவளம், என்பது வேற்று மொழிச் சொற்கள் பலவற்றை அப்படியே எடுத்துக் கொள்வதுதான் என்று பேசிக் கொண்டு தமிழ்ச் சொற்கள் பலவற்றை மாண்டு போகும்படி செய்து வருவதே இன்றைய தமிழின் முற்போக்காக இருக்கிறது.

மொழி வளர்ச்சிக்கு அடிப்படையான செயல்களிலே இவ்வாறு கருத்தற்ற இழி நிலையில் இருக்கும்போது வேற்று நாட்டு நற் கருத்துக்களை இங்கே கொண்டு வருவதும் இங்கேயுள்ள ஒப்பற்ற கருத்துக்களை மற்ற நாடுகளில் பரப்பிப் பயன் படுவதும் அண்மையில் நடக்கக் கூடிய செயல்களாகத் தோன்றவில்லை.

வெளி நாட்டாரான ஒரு போப்பையரும் வீரமா முனிவரும் கால்டுவெல் என்பவரும் செய்த தமிழ்த் தொண்டின் அளவுகூடத் தமிழ் மக்களில் எவரும் செய்யவில்லை; செய்யத் தக்கார்க்கு நல்ல ஆதரவும் இந்நாட்டில் கிடைக்கவில்லை.

ஒப்பற்ற நம் தமிழ் மொழி, மீண்டும் தன் பண்டைப் பெருநிலையை அடைய வேண்டுமேல், முதலில் தமிழ் நாடு தனியாகப் பிரிந்து உள் நாட்டுச் செயல்களில் தன் விருப்பம் போல் நடக்கவும், வெளி நாட்டுத் தொடர்பு, பாதுகாப்பு, போக்குவரவு, அஞ்சல்களில் இந்திய நாட்டு ஆட்சியின் உறுப்பாக இருந்து செயலாற்றவும் உரிமை பெற வேண்டும்.

தமிழ் நாட்டில் ஆட்சி முறைகளும், வழிபாடு, சடங்கு, வாணிபம் முதலிய தனிப் பொது வாழ்க்கைச் செயல்களும் தமிழால் நடைபெற வேண்டும். ஏற்ற கலைச்சொற்களையும் புதிய பெயர்ச்சொற்களையும், தமிழ் இலக்கண இலக்கியங்களில் தேர்ந்த பெரியோர்கள் எல்லாம் அரசாங்கத்தின் சார்பில் ஒன்று கூட்டப்பட்டு ஆராய்ந்து தமிழால் உண்டாக்க வேண்டும். தக்கவர்களைக் கொண்டு அரசாங்கமே தமிழ் நூல்களை உலக மொழிகளிலும் மற்ற மொழிகளில் உள்ள நறு நூல்களைத் தமிழிலும் மொழி பெயர்க்க வேண்டும். திறமை மிக்க பேராசிரியர்களை வெளி நாடுகளுக்கு அனுப்பித் தமிழின் சிறப்பை அங்கெல்லாம் எடுத்துக் காட்டச் செய்து தமிழுக்கு மேற்பட்ட நிலைகளில் ஏதேனும் ஒரு மொழியோ கருத்தோ இருப்பதாகத் தெரிந்தால் அவற்றைப் போற்றித் தழுவிக் கொள்ள வேண்டும். ஆட்சிக்கும் மக்களின் உரிமை உணர்ச்சிக்கும் தாய் மொழியே உயிர் போன்றது என்பதை உணர்ந்து அரசாங்கமே இவ்வாறு மொழி வளர்ச்சியில் பல வகையாலும் கருத்திருத்தி அதற்கு முதன்மை தரும்படி செய்ய வேண்டும். அல்லாத வகையில் தமிழ் வளர்ச்சி என்பதோ தமிழர் முன்னேற்றம் என்பதோ வெறும் கனவாகவும் வீண் பேச்சாகவுந்தான் ஆகுமே ஒழிய வேறில்லை.

—ஆடலரசு.

Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros;**

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

**COIMBATORE.**

# சிலப்பதிகாரம்

## 17. மதுரையைக் காணல்

'முத்துசாமி'

காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து முப்பத்தொரு காவதங் கடந்து கோவலன் முதலிய மூவரும் மதுரைப் புறஞ்சேரியில் வந்து தங்கியதைக் கண்டோம்.

மறுநாட் காலை நேரம். புட்கள் எழுந்து பொழில்களிலும் வயல்களிலும் இனிய ஒலியைப் பரப்பின. கதிரவன் கீழ்த்திசையில் எழுந்தனன். உலகிருள் நீங்கின. பொய்கைகளில் தாமரை மலர்ந்தன. கோவில்களிலும் மன்னவன் அரண்மனையிலும் வெண்சங்கும் முரசும் ஒலித்தன.

திருக்கோவிலில் வலம்புரிச் சங்கம் ஒலிக்க அதனை அதிகாலையில் மக்கள் கேட்டு எழுவது ஒரு நல்ல பழக்கம். விருப்போடு வெண் சங்கம் ஊதா ஊரை, ஊரல்ல, அடவி காடே யென்பர் அப்பாடிகள். இக் காலத்திலும் திருக் கோவில்களில் வெண்சங் கூதும் பழக்கமிருக்கிறது. கிராமங்களில் ஊர் முழுவதும் கேட்கும். நகரங்களில் நகர் முழுவதும் கேட்பதில்லை. ஆனால் சங்கொலியினு மிக்க பேரொலியாய் ஆலைகளில் ஒரு விதவிசைக் கருவியின் ஒலந்தான் கேட்கிறது. அதுவும் அதிகாலையில் கேட்பதில்லை. வலம்புரிச் சங்கொலிதான் மிகவும் நல்லது.

அந் நேரத்தில் கோவலன் கவுந்தியடிகளை வணங்கிச் செய்த தவற்றினை நினைந்துருகிச் சில சொல்லித் தான் மதுரைக்குப் போய்வர விரும்புவதைப் பற்றிக் கூறினனதலால் அதற்கு முன்பேயே எழுந்து காலைக் கடன்களை முடித்திருக்க வேண்டுமன்றோ? அதனால் அதிகாலையில் எழும் பழக்கம் அவன்பா லுள்ளதை அறிக.

கவுந்தியடிகளை வணங்கி, "செய்தவத்தீர்! நான் நல்வழியினின்றும் பிறழ்ந்த தன்மையுடையவன். மலர்போலும் இவள் மேனி வருந்த முன்பின்னறியாத வழியிடத்து அலைத்து வருந்தும்படி செய்தேன். பழமையான இந் நகர வணிகர்க்கு என்நிலைமை யுணர்த்தி வருங்காறும் இவள் உங்கள் திருவடியிற் காப்பாக உள்ளாளாகலின் இவளுக்கோர் தீங்கு முண்டாமோ?" என்று கூறினன்.

செய்த தவற்றுக்கு வருந்தி யுருகும் அவன் இயல்பினைக் கண்ட தவத்தோராகிய கவுந்தியடிகள் மனம் இளகி அவனுக்குச் சில தேறுதல் மொழிகள் கூறியனுப்பினர். அவர் கூறியதாவது:

"காதலியோடு அறவினை நீங்கிய பக்கத்துத் துயருழந்த கோவல! கேள். தீநெறியினின்று நீங்குமின், நீங்கிராயின் அத் தீவினை தன் பயனாகிய துன்பத்தினை நுகர்விக்கும் என்று அறத்துறை நிற்கும் சான்றோர்கள் எவ்வளவுதான் விளக்கிச் சொன்னாலும் அறிவென்னும் உறுதியில்லா மாக்கள் அந் நல்லுரைகளைக் கேட்டு மேற்கொள்ளாமல் தங்கள் வழியிலேயே சென்று வெவ்வினை உருத்து வந்தூட்டத் துன்பப் படும்போது அறியாமை காரணமாக மிகவும் வருந்துவர். செய்த வினைப் பயனை நுகருங் காலத்துக் கற்றறிந்த மேன்மக்கள் எப்படியும் நுகர்ந்தே தீரவேண்டுமென் றறிந்தவராதலால் அதற்காக வருந்த மாட்டார்கள்.

"கூடிய மகளிரைப் பிரிதலால் வருந்துன்பமும், கூடுதலா லுண்டாந் துன்பமும், இவ் விருகாலத்தும் காமன் ஒறுக்குந் துன்பமும், காமவேட்கையுடன் மகளிரைக் கூடியவர்க் கன்றித் தனித்துறவு வாழ்க்கையை மேற்கொண்டோர்க்கில்லை. இம்மையில் பெண்டிரும் உணவுமே கண்கண்ட இன்பந் தரத்தக்க பொருள்கள் என்று எண்ணி அறிவிலார் அடையுந் துன்பத்தைக் கண்ட பெரியோர்கள் காமத்தை நீக்கும்படி சொன்ன அறவுரைகளைக் கேளாமல் கரைகாணாத் துன்பம் அடைந்தவர் இன்றே யன்றி இறந்தவரும் பலராவர். தந்தை யேவலால் மனைவியோடுங் கானம் சென்று அங்கு அவளைப் பிரிந்து மிக்க துயருழந்தான் திருமால் (இராமாயணம்) என்பதனை நீயறியாயோ? அது யாவரு மறியும் வண்ணம் பரந்து பட்ட சொல்லன்றோ? சூதாட்டத்தில் ஆட்சியை யிழந்து காதலியோடுங் கானம் சென்று அங்கு அவளை நள்ளிருளில் பிரிந்து சென்று வருந்தினன் நளன். அவன் பொருள் காரணமாகப் பிரியவில்லை. தமயந்தியால்தான் குற்றமுண்டு என்று சொல்ல முடியுமா? நீ அவ் விருவரையும் போன்றாயுமல்லை. காதலியோடு பிரியா வாழ்க்கை கொண்டுள்ளாய். ஆதலின் வருந்தாது சென்று மதுரையில் பொருந்துழி யறிந்துவா" என்றனர்.

தம் சமண் சமயக் கருத்துக் கேற்பத் துறவின் மேன்மையைப்

பற்றி எடுத்துக் கூறினர். தீவினைப் பயனால் துன்பமுண்டாம் என்று எவ்வளவுதான் பெரியோர் எடுத்துக் கூறினும் கொள்ளாதொழியும் மக்களை எடுத்துக் காட்டியதனைக் காண்க.

இராமன் கதையைக் கூறி "நீ யறிந்திலையோ? நெடுமொழி யன்றோ?" என்று கூறியிருந்தது, தமிழ் நாட்டில் அக் காலத்திலேயே இராமாயணம் மிகுந்து பரவியிருந்தது என்று தெரிகிறது.

கவுந்தியடிகள் பாதக் காப்பில் கண்ணகியை இருக்கச் செய்து கோவலன் மதுரைக்குள் சென்றனன். மன்னருக்கு அடுத்தபடியாக மதிக்கப் பெறும் வணிகர்க்குத் தன் நிலை யுணர்த்தி வருவதாகக் கூறிச் சென்றவன், தான் கருதி வந்ததனை மறந்து பல வீதிகளையும் ஆங்குள்ள சிறப்புக்களையும் பார்த்து மகிழ்ந்து புறஞ்சேரிக்குத் திரும்பினன். அவன் சென்ற வழியும் பல வீதிகளும் அங்குள்ள சிறப்புக்களும் விளக்கப் படுவன வற்றால் அக் கால மதுரையின் சிறப்பை அறியலாம்.

புறஞ்சேரியிலிருந்து மதுரைக்குப்போக ஒரு சுருங்கை வழியிருந்தது சுருங்கை வழியை நிலத்தின் கீழ் மறைந்து செல்லும்படி யமைந்த வழி யென்பர். அவ்வழி பல யானைகள் செல்லும்படியான வழியாக இருந்தது. அவ்வழியின் இறுதியில் மதில் வாயி லிருந்தது. ஆங்கு யவன வீரர் வாளேந்திக் காவல் புரிந்தனர். அவர்கள் ஐயுருவண்ணம் செல்லல் வேண்டும்.

நகரினுள் கடைகழிமகளிர் தம் காதலஞ் செல்வரோடு கூடி யயரும் கணிகையர் வீதியும் அங்காடி வீதியும் இரத்தினங்களின் இயல்பை ஆராய்ந்து காண்பார் இருக்கும் இரத்தினக் கடை வீதியும் பொற்கடை வீதியும், அறுவை வீதியும் கூல வீதியும் எனப் பல வீதிகளும் பல சிறு தெருக்களும் இருந்தன.

கடைகழி மகளிர் என்பவர் பொது மகளிர். இவர் பெண்டிர்க்குரிய பண்புகளைக் கடந்து சென்று ஒழுகுபவராதலின் அவ்வாறு கூறப்பட்டனர். வரைவின் மகளிர் என்பர் திருவள்ளுவர்.

இரத்தினக் கடைவீதியில் இரத்தினங்களின் இலக்கணமறிந்து ஆராய்வர். நவஇரத்தினங்களின் குற்றங்களைக் கண்டு ஆராய்ந்து இலக்கணப்படி நல்ல இரத்தினங்களைத் தேர்ந்தெடுப்பர்.

பூம்புகாரில் "பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும் கட்டு நுண்வினைக் காருகர்" (நெய்வோர்) இருக்கை இருந்தது போல மதுரையிலும்,

"நூலினும் மயிரினும் நுழை நூற்
பட்டினும்
பால்வகை தெரியாப் பன்னூ
றடுக்கத்து
நறுமடி செறிந்த அறுவை வீதி"

இருந்தது. வேட்டி, புடவை' துண்டு முதலியவற்றை அறுவை யென்பர். தறியில் நெய்த பின்னர் அறுத்து எடுக்கப் படுதலின் அறுவை யெனப் பெற்றது நெய்த பின்னர் அளவோடு அறுத்து மடித்து நூறு நூறாக வைத்துக் கட்டின பல அடுக்குகள் காணப் படுவனவாயிருந்தன. ஒவ்வொன்றையும் மடித்து நூறாக்கிய பின் கட்டாகக் கட்டுவர். ஒவ்வொன்றையும் ஒரு மடியென்பர். புதிய புடவை வேட்டி இவைகளுக்கு ஒரு விதமணம் உண்டாதலின் அதனை 'நறுமடி' என்றனர்.

பாண்டி நாட்டில் இக் காலத்தில் நான்கு வேட்டி அல்லது துண்டு சேர்த்து மடித்து மூன்றை ஒரு மடி யென்கின்றனர்.

கூல வீதியில் துலாக்கோலால் அளப்பவர், பறை அம்பணம் என்னும் அளவுக் கருவியால் அளப்பவர் எக்காலமும் திரிந்து கொண்டிருப்பர். கடைகளில் கூலம் குவித்திருக்கும்.

அங்காடி வீதியில் பல வகைக் கைத்தொழில்கள் நடைபெற்றன. வண்டி, தேர் முதலியவையும் போர்க் கருவிகளும் செய்யப்பட்டன.

கோவலன் மேற் கூறிய வீதிகளில் திரிந்து பார்த்து மகிழ்ந்து கொடியை யுடைய மதிற்புறத்ததாகிய புறஞ்சேரிக்குத் திரும்பினன்.

நஞ்சன்கூடு பல்பொடி.
பாக்டெரியாரின்


யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை-1.

# * பருவங்கள் *

இன்று நான் சங்ககாலக் கவிதை ஒன்று படித்தேன். அதிலே காதலன் வரவு நோக்கிக் காத்திருக்கும் காதலியின் மன நிலை வர்ணிக்கப் பட்டிருந்தது. தோட்டத்திலுள் மரத்தைக் காட்டி அது பூப்பதற்குள் திரும்பி வந்து விடுவதாகச் சொல்லிச் சென்றான், வாணிபத்திற்காக வெளிநாடு சென்ற அவள் காதலன். கொன்றை பூத்து விட்டது; ஆயினும் அவள் தலைவன் இன்னும் வரவில்லை. இக் கவிதை நமக்குக் காட்டுவது தலைவியின் மன நிலையை மட்டுமன்று. அது என் மனதில் கிளறி விட்ட சிந்தனைகள் பல. அதன் பலன் தான் இக் கட்டுரை.

காலத்தைக் குறிப்பதற்கு நம் பழந்தமிழர் இயற்கையை எவ்வளவு அழகாய்ப் பயன்படுத்தி வந்தனர்! இன்ன மாதத்தில் திரும்பி வருகிறேன் என்று சொல்லாமல் "கொன்றை பூப்பதற்குள் திரும்பி வருகிறேன்" என்று சொல்வதின் அழகை என்னென்பது. மரங்கள் பூக்கும் காலத்தை அறிந்து, தங்கள் வாழ்க்கையிலும் அவ்வறிவைப் பயன் படுத்தி வந்தனர். இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்து, இயற்கையில் நிகழும் பல்வித மாறுபாடுகளையும் நன்கு அனுபவித்து அதனால் பயன் பட்டு வந்தனர். அவர்களின் உயர்ந்த பண்பாட்டிற்கு இதுவே காரணம்.

ஆனால் நாம் இப்பொழுது வாழும் வாழ்க்கை வெறும் இயந்திர வாழ்க்கையாய் மாறி விட்டது. இயற்கையை நாம் கவனிப்பதேயில்லை. அதன் வியப்புக்கள் நம் கருத்தைக் கவர்வதுமில்லை. அவ்வளவேன், பசியறிந்து உண்ணும் திறன் கூட நம்மிடமிருந்து மறைந்து விட்டது. கடிகாரத்தைப் பார்த்துத்தான் சாப்பிடும் வேளையறிந்து உண்ணச் செல்கிறோம். உதயகதிரவனின் அழகையோ, அவன் மறையும் விந்தையையோ நாம் அனுபவிப்பதில்லை. இங்ஙனம் நம் வாழ்வு கலையகன்ற வெறும் இயந்திர வாழ்வாகச் சுருங்கி விட்டது.

இயற்கையின் அறிவு நமக்குத் தேவை. அதன் அற்புதங்களை அறிந்து அனுபவிக்கும் அழகுணர்ச்சி நாம் பெறவேண்டும். ஆகவே இயற்கையின் பலவித பருவங்களைப்பற்றி இக் கட்டுரையில் எழுதுகிறேன்.

நம்மைச் சுற்றியுள்ள இயற்கை அடிக்கடி மாறிய வண்ணமே இருக்கிறது. காலமும் அதன் குணங்களும் மாறிய படியே இருக்கின்றன. காலை நேரத்தைப்போல் பகல் இல்லை; பகலைப் போல் மாலை இல்லை; ஒவ்வொன்றையும் அதற்குரிய காரணங்களால் நாம் அறிகிறோம். அதுவேபோல் மாதங்களும் ஒன்றுக் கொன்று அதனதன் தன்மையால் மாறுபட் டிருக்கின்றன. சில மாதங்களிற் கதிரவன் வெப்பம், கடுமையாயிருக்கிறது. சில மாதங்களில் அதன் வெப்பம் மிகக் குறைந்து விடுகிறது. வானினின்றும் தாரை தாரையாய் மழை கொட்டி நிலத்தைக் குளிர்விக்கிறது. சில மாதங்களில் இரவில் பனி உலகைத் திரையிடுகிறது. அப்பொழுது குளிர் மிகுந்து காண்கிறது.

இங்ஙனம் பல மாறுதல்கள் நிகழ்ந்தாலும் இவை யாவும் ஓர் ஒழுங்காய் ஒரு முறையோடு நிகழ்கின்றன. காலையை அடுத்துப் பகல், அதையடுத்து மாலை, பின் இரவு என்றும்; வெப்பம் மிகுந்த இளவேனில், பின் முதுவேனில், கார் காலம், கூதிர்காலம், முன்பனிக் காலம், பின் பனிக்காலம் என்றும் ஓர் ஒழுங்கில் காலம் சுழல்கிறது.

இவற்றைக் கூர்ந்து கவனித்த முன்னோர் காலத்தைச் சிறு பொழுது என்றும், பெரும் பொழுது என்றும் இரு பெரும் பிரிவுகளாய்ப் பிரித்தனர். ஒரு நாளை விடியற்காலை, காலை, பகல், மாலை, இரவு, யாமம் என்னும் ஆறு பிரிவுகளாகவும், ஓர் ஆண்டை இளவேனில், முதுவேனில், கார்காலம், கூதிர்காலம், முன்பனிக் காலம், பின் பனிக்காலம் என ஆறு பருவங்களாகவும் பிரித்துள்ளனர்.

சிறுபொழுதை நாம் நன்கு அன்றாடம் உணர்கிறோம்.

காலையில் கதிரவன் எழுந்து உயிர்களை எழுப்புகின்றான் அது வரை இருளில் மூழ்கியிருந்த உலகம் அவனுடைய இளங்கதிர்கள் பட்டுப் பொன்னொளி கொண்டு, நீராடிய மங்கைபோல் தோன்றுகிறது. நீர்ப் பொழிலில் உள்ள தாமரை மலர்ந்து புன்முறுவலிக்கிறது.

நடுப்பகல் நெருங்க நெருங்க அவன் கதிர்களின் வெம்மை மிகுகிறது. உயிரினங்கள் களைப்பால் சோர்வு மிகுந்து காண்கின்றன.

மாலையில் மீண்டும் கதிரவன் வெம்மை குறைந்து பொன்னொளி கொண்டு உலகை எழில்

மயக்கத்தில் ஆழ்த்துகின்றான். தன் காதலன் மறைந்ததும் தாமரை குவிகின்றது. புள்ளினங்கள் தத்தம் கூடு நோக்கி விரைகின்றன. பசுக்களும், எருமைகளும் தத்தம் கன்றுகளின் நினைவாய் வீடுநோக்கி விரைகின்றன. ஆடவர்கள் தத்தம் தொழில்களினின்று மீண்டும் ஆவலுடன் வீடு திரும்புகின்றனர்.

பிறகு மெல்ல மெல்ல இருள் கவிகிறது. வரப்போகும் இரவில் ஆட்சி செய்யத் திங்கள் உலா வருகிறது. வானத்திலே விண்மீன் ஒவ்வொன்றாய் அரும்புகின்றது. சற்று நேரத்திற்கெல்லாம் முல்லைக் காடாய் விடுகிறது நீல வானம். கீழே அல்லி மலர்கிறது. மல்லிகை, முல்லை கட்டவிழ்கின்றன. பின் நடு யாமத்தில் உயிர்கள் யாவும் உறங்குகின்றன. உலகமே துயிலில் ஆழ்ந்திருக்கிறது.

பிறகு கிழக்குத் திசையில் வான முகடு வெளுக்கிறது. அங்கே விடிவெள்ளி தோன்றுகிறது. உழவர்கள் அதைக் கொண்டே பொழுது புலர்ந்ததை அறிந்து வயலுக்குச்செல்கின்றனர். சற்று நேரத்திற்கெல்லாம் பகலில் ஆட்சி செய்யக் கிளம்ப இருக்கும் கதிரவனுக்குக் கட்டியங் கூவுகிறது கூரை மீது நின்று கொக்கரிக்கும் சேவல்.

இங்ஙனம் பகல், இரவு; கதிரவன், திங்கள் என நாட்கள் சுழல்கின்றன.

இவ்வாறே ஓர் ஆண்டும் ஆறு பருவங்களாய்ச் சுழல்கிறது. ஒவ்வொரு பருவத்திலும் இயற்கை அன்னை ஒவ்வொரு கோலத்தில் விளங்குகிறாள்.

---

# பொதுமையின் இன்பம்

"நலங்கிள்ளி"

மாந்தன் வளர்ச்சியை உயிரின் அடிப்படையில் ஆய்ந்த மாணிக்கவாசகரும், உடலின் அடிப்படையில் ஆய்ந்த சார்லஸ் டார்வினும், ஒரே முடிவைத்தான் கண்டனர். அதுவே பரிணாமவாதம் என்பது. ஓரறிவுடைய உயிராம் புல்லில் இருந்து ஐந்தறிவுடைய உயிர்களாம் விலங்கு வரை படிப்படியாக வளர்ச்சியடைந்த பின்னர், நான்கு கால்களால் நடப்பதை விடுத்து இரண்டு கால்களைத் தனது கைகளாகப் பயன் படுத்தவும் தெரிந்து கொண்ட காலந்தொட்டு, உறுமுதலும் ஊளையிடுதலும் கத்தலும் கதறுதலும் விடுத்துப் பேசப் பழகிய காலம் முதல், சிந்திக்குந் திறன் தனக்குச் சிறிது சிறிதாகச் சுடர்விட ஆரம்பித்த காலத்திலிருந்து, மனிதன், தன் வளர்ச்சிக்கு, தன் உயிர் வாழ்க்கைக்கு, எவ்வளவு போராட வேண்டும் என்பதை நன்கு உணர்ந்தான். மனிதன் மட்டுமன்று; எல்லா உயிரினமும், தான் வாழ நிச்சயமாகப் போராட வேண்டியே உள்ளது. இதைத்தான் உயிர் வளர்ச்சிக்கான போராட்டம் **(struggling for Existence)** என்று சார்லஸ் டார்வின் குறிப்பிடுகிறார்.

ஆதி (முதல்) மனிதன், தன்னை எதிர்த்த விலங்கினத்திடமிருந்து தப்ப, குகையை நாடினான். முடிந்தவரை அவைகளை அழிக்க முயன்றான். பசித்தபோது, இயற்கை ஏராளமாக வழங்கிய காய் கனிகளையோ கிழங்குகளையோ புசித்தான். இனிமையான தெண்ணீரைப் பருகினான். ஆனால் போராடினான். தன்னுடைய உயிருக்கு எத்தகைய ஆபத்தும் நேர்ந்துவிடக் கூடாது என்ற காரணத்தாலேயே அவன் போராட வேண்டி இருந்தது அன்று, வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவுக்காக! அல்ல, உணவு உடை உறையுள் மூன்றும் அவனுக்கு இயற்கையில் இருந்த காரணத்தால்.

மாரிக்காலத்தில், பனிக்காலத்தில் பெரும் புயலில், இயற்கை தன் வளத்தைத் தருவதில் தவறினமை கண்டான். பசி அவனுக்


குருதலக் கைத்தறிகளில்
நெய்த

**மேல் குட்டைகள்**
**(டவல்கள்)**

முறுக்கு நூலால் ஆனவை!
தூய்மையான சலவை!
கெட்டியான சாயம்!
அழகிய கரைகள்!

மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

அளவுகள்: 24"X48"
26"X52"
28"X54"
30"X60"

வணிகர்க்கு,
தக்க கழிவுகள் உண்டு!

குருதலம், மாம்பாக்கம்;
மதுராந்தகம் P. O.

குச் சிந்தனையை உண்டாக்கிற்று. வேற்றிடம் நாடினன். இங்குத்தான் முதல் முயற்சி உண்டாயிற்று, முயற்சியால் கிடைத்தவற்றைச் சேமித்து வைத்தான். திரும்பவும் இத்தகு நிலை ஏற்படக் கூடாதே என்பதற்காக; இங்குத்தான் சேமித்து வைத்தல்-முதன் முதலாகத் தனி உடைமை தொடங்குகிறது.

தேவைக்கு அதிகமான உணவுப் பண்டங்களை ஒருவன் சேமித்து வைத்துங் கொண்டதாலே பின் சென்ற மற்ற ஒருவனுக்கு ஆங்கு உணவுப் பண்டங் கிடைக்கவில்லை. வழி என்னவென்று ஆய்ந்தான். சேமித்து வைத்தவனிடமிருந்து அதைக் கொள்ளை கொள்ள முயன்றான். திருடுதல் தொடக்கம் இங்குத்தான். இதன் காரணமாக ஏற்பட்ட சண்டைதான் வலி மிக்கவன் உயரவும் வலி குறைந்தவன் தாழவும் வழி வகுத்தது.

சேமித்த பொருள்களை மனிதன் தானே துய்த்தலோடு தன் அன்புக்கும் ஆதரவுக்கும் உட்பட்ட மனைவிக்கும் மக்கட்கும் பகிர்ந்தான், அவர்களால் தனக்கு இன்பம் கிடைத்த காரணத்தால் இங்குத்தான் உண்மையான பொது உடைமை தொடங்குகிறது. அஃதாவது தனி உடைமையில் இருந்து பொது உடைமை முகிழ்த்ததாகும் இது என்பது.

எனவே இன்றைய நிலையிலும் எங்கும் ஒரு குடும்பம் என்பது ஒரு சிறிய பொது உடைமை நிலையம் தான் என்பது விளங்கும். அதாவது. குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் தேவைக்குத் தகுந்த ஊதியம் (இங்கு உணவு) தரப்படுகிறது. யாவரும் சக்திக்குத் தகுந்த உழைப்பு உழைக்கின்றனர்.

இந்தச் சிறிய குடும்பம் என்னும் பொது உடைமை நாட்டிலேயும் தனி உடைமை நிலவத்தான் செய்கிறது. சம்பாதிக்கும் குடும்பத் தலைவன் தன் தேவைக்கு வேண்டியதென்று கொஞ்சம் பொருளும் மனைவி மைந்தர் ஒவ்வொருவரும் அது போலவே தங்கள் தங்களுக்குத் தேவை என்று கொஞ்சம் பொருளும் எடுத்துக் கொள்ளுகின்றனர். எனவே, பொது உடைமையாம் குடும்பத்திலும் தனியுடைமை நிலவுகின்றது என்பதாகிறது.

ஈண்டுத் தனி உடைமையில் பொது உடைமையும் பொது உடைமையில் தனி உடைமையும் கண்டனம்.

தனித்து வாழ்ந்த மனிதன், தனக்கென்று சேமித்துத் தனி உடைமைக்காரனாகிவிட்டவன், குடும்பத்தில் பொது உடைமையைக் காண்கிறான். இந்தப் பொது உடைமை சரிவர நடைபெறாமல் பற்பல குட்டித் தனி உடைமைக்காரர்களை, முதலாளிகளைக் குடும்பத்துள்ளே ஆக்கிவிடுகின்றது. இதற்குக் காரணம் யாது? பொது உடைமை சரிவர இயங்காதா? அல்லது பொது உடைமையில் இதற்குத் தனி உடைமை தோன்றாமலிருக்க நெறி உண்டா? அது யாது? என்று ஆராய்ந்தால், குடும்பமாகிய சிறு பொது உடைமை நன்கு சீர்திருந்தும்; இதற்கு என்ன காரணம் நாம் கண்டு பிடிக்கிறோமோ, அதுவேதான் நாட்டில் நிலவும் பொது உடைமை தனி உடைமை யாவற்றிற்கும் காரணம் ஆகும்.

இனி இங்குக் கூறிய தனி உடைமை பொது உடைமை என்னும் இரண்டு தொடர்களிலும் காணப்படும் உடைமை என்பது யாது? என்பது நன்கு விளங்கின பிறகுதான், மேல் கேட்ட கேள்விகட்குத் தக்க பதிலும் பொது உடைமை இயல்பின் அடிப்படையும் நமக்கு நன்கு விளங்கும். (வரும்)

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள்
கிசான் டிரேட்மார்க்


பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்குதெரு சென்னை 1.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாமபாக்கம்; மதுராந்தகம். (அஞ்.)